பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
14 11 2024 **THURSDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. Dominica–வின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது..

2. மத்திய அரசு ஊழியர்களுக்கான தேசிய கற்றல் வாரம் நிர்வாகத் திறனை மேம்படுத்த உதவிடும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் கூட்டம் காணொலி வாயிலாக இன்று நடைபெற்றது.

4. சென்னை, கிண்டி அரசு மருத்துவமனையில் மருத்துவர் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து, மாநிலம் முழுவதும் மருத்துவர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

5. Lignano சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>><<<<<

Dominica–வின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவிட் பாதிப்பு காலத்தில் Dominica–வுக்கு வழங்கிய உதவியை அங்கீகரிக்கும் வகையில், இந்த விருது பிரதமருக்கு வழங்கப்படவுள்ளது.

Dominica அதிபர் திருமதி. Sylvanie Burton கயானாவில் நடைபெறவுள்ள இந்திய – Caricom உச்சிமாநாட்டில் இந்த விருதினை திரு. நரேந்திர மோடிக்கு வழங்குகிறார்.

இந்த மாநாடு கயானாவின் George Town–ல் வரும் 19ஆம் தேதி தொடங்கி, 21ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

மத்திய அரசு ஊழியர்களுக்கான தேசிய கற்றல் வாரம் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சிந்தனையில் உதித்ததாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற தேசிய கற்றல் வார நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

அரசு ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த இந்த இணையதள பயிற்சி, நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்கும், சேவைகளை விரைவுபடுத்துவதற்கும் உதவிடும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் கூட்டம் இன்று நடைபெற்றது.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த கூட்டத்தில் நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு உயரதிகாரிகள் மற்றும் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

>>>>><<<<<

பொங்கல் பண்டிகையை ஒட்டி வழங்கப்படும் இலவச வேட்டி சேலை தயாரிக்கும் பணி விரைவாக நடைபெற்று வருவதாக கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தி கூறியுள்ளார்.

ராணிப்பேட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொங்கல் பண்டிகைக்கு முன்னதாகவே வேட்டி சேலைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

வேட்டி, சேலை தயாரிக்கும் பணிகள் தினசரி கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் திரு. காந்தி கூறினார்.

>>>>><<<<<

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட நலத்திட்டங்களை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அருகே இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகம் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவதற்கு அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களே காரணம் என்று தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம் வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்காளர் பட்டியில் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம் போன்ற பணிகள் இந்த சிறப்பு முகாம்களில் மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுபோன்ற சிறப்பு முகாம்கள் வரும் 23 மற்றும் 24ஆம் தேதிகளில் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சென்னை, கிண்டி அரசு மருத்துவமனையில் மருத்துவர் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து, மாநிலம் முழுவதும் மருத்துவர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் அரசு மருத்துவர்கள், புறநோயாளி பிரிவில் சிகிச்சை அளிப்பதை தவிர்த்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சிவக்குமார் 31 செகண்ட்ஸ்)

திருவாரூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையிலும் மருத்துவர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மதுரையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அரசு மருத்துவர்கள் சங்கத் தலைவர் டாக்டர் இளமாறன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

(சவுண்ட் பைட் - இளமாறன் 38 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 51 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

ராமேஸ்வரம் - பாம்பனில் புதிதாக கட்டப்பட்டுள்ள தூக்குப் பாலத்தில் அதிவிரைவு ரயில் சோதனை ஓட்டம் இன்று நடைபெற்றது.

தெற்கு ரயில்வேயின் பாதுகாப்பு ஆணையர் திரு. A.K. Chowdhary இந்த ஆய்வினை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் — கார்த்திகேயன் 35 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

நாகை மாவட்டத்தில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற குழந்தை திருமண ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

கோவையில் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. Kranthi Kumar Pati இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் இந்தியன் வங்கியின் புதிய கிளை மற்றும் ஏடிஎம் மையத்தை ஆட்சியர் திருமதி. உமா இன்று திறந்து வைத்தார்.

>>>>><<<<<

திண்டுக்கல் மாவட்டம், குதிரையாறு அணையிலிருந்து பாசனத்திற்காக நாளை முதல் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திண்டுக்கல், திருப்பூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட பழனி மற்றும் மடத்துக்குளம் வட்டங்களில் உள்ள நிலங்கள் பாசன வசதி பெறும்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

Lignano சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

இத்தாலியில் நடைபெற்ற இப்போட்டியில் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில், Sarthak Arya மற்றும் மகளிர் பிரிவில் Syndrela Das தங்கப்பதக்கத்தையும், Divyanshi Bhowmick வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>><<<<<

ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா - தாய்லாந்து இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

பீகாரின் Rajgir-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் சற்றுமுன்வரை இந்தியா 13-0 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

>>>>><<<<<

மலேசிய கோப்பை ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் மற்றும் அபெய் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் வேலவன் செந்தில்குமார் 11-6, 11-6, 11-7 என்ற செட்கணக்கில் ஹங்கேரியின் Farkas Balazs-ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அபெய் சிங், 11-8, 7-11, 11-5, 8-11, 11-5 என்ற செட்கணக்கில் கத்தாரின் Abdulla Al Tamimi-ஐ வென்றார்.

>>>>><<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>END<<<<<